# ஆகஸ்ட் - 23 - புதன்

## லீமா நகர புனித றோஸ்

**அவர் உள்ளம் விரும்பியதை நீர் அவருக்குத் தந்தருளினீர்: திபா. 21:2**

### முதல் வாசகம் : நீதிபதிகள்9 : 6 – 15

செக்கேம் மற்றும் பெத்மில்லோவின் குடிமக்கள் அனைவரும் செக்கேமில் "சிலைத்தூண் கருவாலி" மரத்தடியில் அபிமெலக்கை அரசனாக ஏற்படுத்தினர்.இது யோத்தாமுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் கெரிசிம் மலைக்கு ஏறிச் சென்று அதன் உச்சியில் நின்று கொண்டு உரத்த குரலில் கூப்பிட்டுக் கூறியது "செக்கேமின் மக்களே, எனக்குச் செவிசாயுங்கள் கடவுள் உங்களுக்குச் செவி கொடுப்பார்.மரங்கள், தங்களுக்கு ஓர் அரசனைத் திருப்பொழிவு செய்யப் புறப்பட்டன. அவை ஒலிவ மரத்திடம், "எங்களை அரசாளும்" என்று கூறின.ஒலிவ மரம் அவற்றிடம், "எனது எண்ணெயால் தெய்வங்களும் மானிடரும் மதிப்புப் பெறுகின்றனர். அப்படியிருக்க அதை உற்பத்தி செய்வதை நான் விட்டுக் கொடுத்து மரங்களுக்கு மேல் அசைந்தாட வருவேனா?" என்றது.மரங்கள் அத்தி மரத்திடம், "வாரும், எங்களை அரசாளும்" என்றன.அத்தி மரம் அவற்றிடம், "எனது இனிமையையும் நல்ல பழத்தையும் விட்டுவிட்டு, மரங்கள் மீது அசைந்தாட வருவேனா?" என்றது.மரங்கள் திராட்சைக் கொடியிடம், "வாரும், எங்களை அரசாளும்" என்றன.திராட்சைக் கொடி அவற்றிடம், "தெய்வங்களையும் மானிடரையும் மகிழ்விக்கும் எனது திராட்சை இரசத்தை விட்டுவிட்டு மரங்கள்மேல் அசைந்தாட வருவேனா?" என்றது.மரங்கள் எல்லாம் முட்புதரிடம், "வாரும், எங்களை அரசாளும்" என்றன.முட்புதர் மரங்களிடம், "உண்மையில், உங்கள் மீது ஆட்சி செய்ய நீங்கள் என்னைத் திருப்பொழிவு செய்தால், வாருங்கள் என் நிழலில் அடைக்கலம் புகுங்கள் இல்லையேல், முட்புதரான என்னிடமிருந்து நெருப்பு கிளர்ந்தெழுந்து லெபனோனின் கேதுரு மரங்களை அழித்துவிடும்" என்றது.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் வல்லமையில் அரசர் பூரிப்படைகிறார்

### நற்செய்தி : மத்தேயு 20 : 1 – 16

அக்காலத்தில் இயேசு தம்சீடர்களைப் பார்த்துக் கூறியதாவது : "விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம் நிலக்கிழார் ஒருவர் தம் வேலையாள்களை வேலைக்கு அமர்த்த விடியற்காலையில் வெளியே சென்றார்.அவர் நாளொன்றுக்கு ஒரு தெனாரியம் கூலி என வேலையாள்களுடன் ஒத்துக்கொண்டு அவர்களைத் தம் திராட்சைத் தோட்டத்துக்கு அனுப்பினார். ஏறக்குறைய காலை ஒன்பது மணிக்கு அவர் வெளியே சென்ற பொழுது சந்தை வெளியில் வேறுசிலர் வேலையின்றி நிற்பதைக் கண்டார். அவர்களிடம், "நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள் நேர்மையான கூலியை உங்களுக்குக் கொடுப்பேன்" என்றார்.அவர்களும் சென்றார்கள். மீண்டும் ஏறக்குறைய பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் மூன்று மணிக்கும் வெளியே சென்று அப்படியே செய்தார்.ஏறக்குறைய ஐந்து மணிக்கும் வெளியே சென்று வேறு சிலர் நிற்பதைக் கண்டார். அவர்களிடம், "நாள் முழுவதும் வேலை செய்யாமல் ஏன் இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.அவர்கள் அவரைப் பார்த்து, "எங்களை எவரும் வேலைக்கு அமர்த்தவில்லை" என்றார்கள். அவர் அவர்களிடம், "நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள்" என்றார்.மாலையானதும் திராட்சைத் தோட்ட உரிமையாளர் தம் மேற்பார்வையாளரிடம், "வேலையாள்களை அழைத்துக் கடைசியில் வந்தவர் தொடங்கி முதலில் வந்தவர்வரை அவர்களுக்குரிய கூலி கொடும்" என்றார்.எனவே ஐந்து மணியளவில் வந்தவர்கள் ஒரு தெனாரியம் வீதம் பெற்றுக் கொண்டனர்.அப்போது முதலில் வந்தவர்கள் தங்களுக்கு மிகுதியாகக் கிடைக்கும் என்று எண்ணினார்கள். ஆனால் அவர்களும் ஒரு தெனாரியம் வீதம் தான் பெற்றார்கள். அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டபோது அந்நிலக்கிழாருக்கு எதிராக முணுமுணுத்து,"கடைசியில் வந்த இவர்கள் ஒரு மணி நேரமே வேலை செய்தார்கள். பகல் முழுவதும் வேலைப் பளுவையும் கடும் வெயிலையும் தாங்கிய எங்களோடு இவர்களையும் இணையாக்கி விட்டீரே" என்றார்கள்.அவரோ அவர்களுள் ஒருவரைப் பார்த்து, "தோழரே, நான் உமக்கு அநியாயம் செய்யவில்லை. நீர் என்னிடம் ஒரு தெனாரியம் கூலிக்கு ஒத்துக் கொள்ளவில்லையா?உமக்குரியதைப் பெற்றுக் கொண்டு போய்விடும். உமக்குக் கொடுத்தபடியே கடைசியில் வந்த இவருக்கும் கொடுப்பது என் விருப்பம்.எனக்குரியதை நான் என்விருப்பப்படி கொடுக்கக் கூடாதா? அல்லது நான் நல்லவனாய் இருப்பதால் உமக்குப் பொறாமையா?" என்றார்.இவ்வாறு கடைசியானோர் முதன்மையாவர். முதன்மையானோர் கடைசியாவர்" என்று இயேசு கூறினார்.

**தியானம்:** நீதி என்பது என்ன? இந்த கேள்வியை ஆய்வு செய்ய அழைக்கின்றது இன்றைய வாசகம். ஒருவருக்குரியதை அவருக்கு வழங்குவதுதான் நீதி. இந்த நீதியும் மனிதரின் பார்வையில் ஒன்றாகவும் இறைவனின் பார்வையில் வேறொன்றாகவும் இருப்பதை இன்றைய உவமை சுட்டிக்காட்டுகின்றது. அத்துடன் மனித நீதியை விட்டு விலகி இறை நீதியின் பக்கம் நம்மை அழைக்கின்றது. மனித நீதியின் முதலில் பணியில் சேர்ந்து அதிக நேரம் உழைத்தவர்களுககு அதிக ஊதியம் கிடைத்திருக்க வேண்டும், தாமதமாக வநது குறைந்த நேரம் உழைத்தவர்கள் குறைவாகப் பெற்றிருக்க வேண்டும் இதுதான் சரி. அப்போதுதான் அனைவரும் நேர்மையாய் உழைப்பார்கள். ஆனால் இறைவனின் பார்வை அப்படியில்லை அது பரிவுள்ள பார்வை. மனித சமுக காரணங்களினால் எல்லா மனிதர்களுக்கும் சமமான வாய்ப்புக்களும் திறமைகளும் அமைந்துவிடுவதில்லை. ஒரு சிலர் பிறரை விட பிற்பட்டவர்களாக அல்லது பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்து விடுகின்றனர். அவர்கள் மீது சிறப்பான ஒரு பரிவைப் பொழிந்து அவர்களுக்கும் அதிக ஆற்றலும் வாய்ப்புகளும் கிடைத்தவர்களுக்கு இணையான ஊழியத்தை தலைவர் வழங்குகின்றார் .இது தான் இறை நீதி ஆமென்.